DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No: 145/2021 Deposition of Witness for : P.W.19**

| | | | |
|---|---|---|---|
| Name | : ஆல்பர்ட் | Calling | : |
| Father's Name | : சாமுவேல் சத்தியநாதன் | Taluk | : |
| Age | : | District | : |
| Village | : | | : |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 09-03-2026

**முதல் விசாரணை**

1. நான் திருச்சி மாவட்டம் நில அபகரிப்பு பிரிவில் துணை கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன். தற்போது தற்காலிக பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளேன். இதற்கு முன்பு நான் வெள்ளக்கோயில் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியில் இருந்த போது 12.05.2017 ஆம் தேதி நிலையைப் பொறுப்பில் இருந்த உதவி ஆய்வாளர் கருணாகரன் என்பவர் பதிவு செய்திருந்த முதல் தகவல் அறிக்கை எண். 209/2017 இதச 302 ன் கீழான வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். அதிகாலை 12.15 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் செல்வராஜ், அஷ்ரப் அலி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பின்னிட்டு ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சென்று இறந்து போன தங்கராஜ் என்பவருடைய பிரேதத்தின் மீதுகாலை 7 மணி முதல் 10.15 மணி வரையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன் மேற்படி **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.17.** சம்பவ இடத்திலிருந்து தடையப் பொருட்களை சேகரிப்பதற்காக மாவட்ட தடையவியல் தடைய அறிவியல் துறை

அதிகாரிகளுக்கு வாணொலி மூலம் வேண்டுகோள் கொடுத்தேன்.

2. பின்னிட்டு இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரியை சாட்சிகள் அடையாளம் காட்ட வெள்ளகோவில் மூலனூர் சாலையில் கரட்டுபாளையம் பேருந்து நிறுத்தத்தில் கைது செய்து அவரை விசாரித்த போது அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை கொடுத்தார். சாட்சிகள் துரையன் மற்றும் பால்ராஜ் ஆகியோர் முன்னிலையில் மேற்படி வாக்குமூலத்தை பதிவு செய்தேன். பின்னிட்டு எதிரி எடுத்து ஆஜர் செய்த கத்தி மற்றும் ரத்தக்கரை படிந்த பேண்ட் ஆகியவற்றை எதிரியுடைய வீட்டில் குளியலறையில் இருந்து அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினேன். எதிரியை நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். சாட்சிகள் சுப்ரமணியம் ராமசாமி, ரதிமலர், உதயகுமார், சிவன்மதி, சிரஞ்சீவி, அஷ்ரப்அலி, செல்வரஜ் துரையன் பால்ராஜ், ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சி சுப்ரமணியம் ஆஜர் செய்த இறந்து போனவரின் ரத்தக்கரை படிந்த சட்டையை காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும் போது என்னிடம் கொடுத்தார். அதை படிவம்–91 இல் கைப்பற்றி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

3. சம்பவ இடத்திலிருந்து தடயவியல் அறிவியல் துறை நிபுணர் திரு ரமேஷ் என்பவர் கைப்பற்றி கொடுத்த சம்பவ இடத்தின் சுவற்றில் இருந்த ரத்தக்கரை மற்றும் தரையில் இருந்து சேகரிக்கப்பட்ட ரத்த மாதிரி, சிந்தடிக் பேக்கிலிருந்து சேகரிக்கப்பட்ட ரத்த மாதிரி, சம்பவ இடத்துக்கு முன்னால் இருந்த கிரில் கேட்டில் இருந்து சேகரிக்கப்பட்ட ரத்த மாதிரி, ஆகியவற்றை பெற்று படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மேற்படி தடயங்களை தடையவியல் அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி அறிக்கை பெறுவதற்கு உரிய நீதிமன்றத்தில் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். சடலக்கூறாய்வு பணிக்கு பணிக்கப்பட்ட காவலர் திரு சரவணன் அவர்கள் சடலக்கூறாய்வுக்கு பிறகு நிலையம் வந்து ஆஜர் செய்த இறந்துபோனவருடைய லுங்கி, டீ சர்ட் மற்றும் பிரவுன் நிற பனியன் ரத்தக்கரை படிந்ததை ஆஜர் செய்ததை நீதின்றத்தில்

வேண்டுகோள் கடிதம் கொடுத்து தடையவியல் துறை அலுவலகத்திற்கு அனுப்ப கோரினேன். மேற்படி **வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.18. தடயவியல் அறிவியல் துறை வழங்கிய அறிக்கைகள் அ.சா.ஆ.19 (4 வரிசை)**.

4. சாட்சிகள் மோகன்ராஜ், சரவணன், டாக்டர் ஜெயபிரகாஷ், டாக்டர் களஞ்சிய ராணி, உதவி ஆய்வாளர் கருணாகரன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னிட்டு 13.05.2017 ஆம் தேதி_சாட்சிகள் சார்லஸ் தணபதி, மணிமகன் செல்வராஜ், சாமியப்பன் மகன் செல்வராஜ் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனக்கு பணி மாறுதல் வந்ததால் வழக்கு கோப்பை எனக்கு பின்பு ஆய்வாளராக பணியாற்றிய திரு.ஜெயபாலன் என்பவரிடம் ஒப்படைத்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. பல்லடம் மருத்துவமனை மருத்துவர் திரு.கோபி என்பவரை நான் விசாரிக்கவில்லை. புகார் கொடுத்த சுப்பிரமணி என்பவருக்கு எழுதப் படிக்க தெரியாது என்பதை நான் என்னுடைய விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் நான் விசாரித்த போது அவர் தனக்கு எழுத படிக்கத் தெரியாது என்று என்னிடம் சொல்லவில்லை. அவர் எழுதப் படிக்கத் தெரியாதவர் என்கிற அடிப்படையை நான் சரிவர விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கின் புகாரை மேற்படி சுப்பிரமணி எழுதிக் கொடுக்கவில்லை என்பதை என்னுடைய விசாரணையில் நான் தெரிந்து கொண்டேனா என்றால் மேற்படி சங்கதியை என்னுடைய விசாரணையில் அவர் சொல்லவில்லை. மேற்படி புகாரை மேற்படி சுப்பிரமணியன் கொடுக்கவில்லை என்றாலும் அவரது மகளின் பெயரே புகாரில் தவறாக உள்ளது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி அ.சா.1 சுப்பிரமணி என்னுடைய விசாரணையின்போதோ அல்லது புகாரியிலோ எதிரிக்கும் சிவன்மதிக்கும் எந்த வருடத்தில் இருந்து பழக்கம் என்றோ எத்தனை ஆண்டுகள் பழக்கம் என்றோ குறிப்பாக சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல ஒரு வருடம் தொடர்பு இருந்தது என்று குறிப்பிட்டுள்ளார் (சாட்சி மீண்டும் இருவருக்கும் ஒரு வாரம் தொடர்பு இருந்ததாக தனக்கு தெரிய

வந்ததாக குறிப்பிடுகிறார்).

2. மேற்படி இருவருக்கும் தொடர்பு இருந்த விபரம் சுப்பிரமணிக்கு எப்போது தெரிய வந்தது என்று குறிப்பாக சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. மேற்படி சிவன்மதிக்கு திருமணத்திற்கு முன்பே எதிரியுடன் பழக்கமா அல்லது திருமணத்திற்கு பின்பு பழக்கமா என்று புகாரில் குறிப்பாக சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். சிவன்மதியும் அவரது மகன் யாத்ராவையும் அழைத்துச் சென்றதாக கூறப்படும் நாளுக்கு பிறகு எத்தனை நாட்களுக்கு பிறகு மேற்படி சங்கதியை சுப்பிரமணியனுக்கு தெரிய வந்தது என்று புகாரில் குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை. சிவன்மதி எதிரியுடன் தான் சென்றுள்ளார் என்று யார் மூலம் தெரிந்து கொண்டேன் என்று சுப்பிரமணி என்னுடைய விசாரணையின் போதோ அல்லது புகாரிலோ குறிப்பிட்டுள்ளாரா என்றால் அவ்வாறு கூட்டிச்சென்றதாக புகாரிலோ அல்லது விசாரணையிலோ சொல்லவில்லை. புகாரில் எதிரி சிவன்மதியை கூட்டிக் கொண்டு சென்றதாக சொல்லவில்லை. ( தற்போது சாட்சி புகாரை படித்துபார்த்து விட்டு எதிரி மேற்படி சிவன்மதி மற்றும் அவரது மகளை அழைத்து சென்றதாக சாட்சியமளிக்கிறார் ).

3. சிவன்மதியை எதிரி கூட்டிச் சென்றது தன்னுடைய மருமகன் உதயகுமார் சொல்லி தான் தனக்கு தெரியும் என்று சாட்சி சுப்பிரமணி புகாரிலும் என்னுடைய விசாரணையிலும் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். சிவன்மதி எதிரியுடன் தான் சென்று விட்டார் என்று உதயகுமாருக்கு எப்படி தெரிய வந்தது என்று அ.சா.1 என்னுடைய புகாரில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரியை கொலை செய்துவிட்டால் எதிரி மற்றும் சிவன்மதிக்கு இடையேயான பழக்கம் முற்றுப்பெற்றுவிடும் என்று சுப்ரமணியன் தங்கராஜ் அ.சா.1ன் மகன் உதயகுமார் மற்றும் அவர்கள் உறவினர் ஒருவர் ஆகியோர் முடிவு செய்திருந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. புகாரின் இரண்டாவது பக்கத்தில் நான்காவது வரியில் குறிப்பிட்டுள்ள சின்னசாமி என்பவர் யார் என்றால் மேற்படி ராக்கி மற்றும் சின்னசாமி ஆகியோர் ஒரே பெயர்களாகும். புகாரில் எதிரியின் பெயர் ராக்கி என்கிற சின்னசாமி என்று

குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். நான் விசாரித்த சாட்சிகள் யாராவது எதிரியுடைய பெயர் ராக்கி என்கிற சின்னசாமி என்று குறிப்பிட்டுள்ளார்களா என்றால் இல்லை. ராக்கி மற்றும் சின்னசாமி ஆகியோர் வேறு ஆனவர்கள் என்றாலும் இந்த வழக்கில் நான் சரிவர விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரியுடைய பள்ளி சான்றிதழ்களை பெற்று அவரது பெயர் ராக்கி என்கிற சின்னசாமி என்று ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோனா என்றால் இல்லை.

4. அ.சா.1 தன்னுடைய விசாரணையிலோ அல்லது புகாரிலோ இறந்துபோனவரும் அவரும் சம்பவ இடத்திலிருந்து மருத்துவமனைக்குச் சென்ற டிவிஎஸ் 50 வாகனத்தின் பதிவு எண்ணை குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை. அவ்வாறு டிவிஎஸ் 50 மேற்படி சம்பவத்தில் பயன்படுத்தப்படாததால்தான் அதனுடைய பதிவு எண்ணை அவர்கள் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. புகாரில் அ.சா.1, 11.05.2017 ம் தேதி மாலை எந்த வாகனத்தில் சென்றதாக குறிப்பாக சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி வாகனத்தின் பதிவுச் சான்று உள்ளிட்ட ஆவணங்களை நான் வாங்கி பார்வையிடவில்லை என்றால் சரிதான். மேற்படி வாகனம் இந்த வழக்கில் பயன்படுத்தப்படாததால்தான் அதன் பதிவு சான்றை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 சுப்பிரமணி, தங்கராஜ், உதயகுமார், ராக்கி ஆகியோருடைய செல்போன் எண்களை என்னுடைய விசாரணையில் நான் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் சுப்ரமணி என்பவருடைய செல்போன் எண்ணை மட்டும் தெரிந்து கொண்டேன். சுப்பிரமணி என்பவருடைய செல்போன் எண்ணின் அழைப்பு பட்டியல்களை வாங்கி பரிசீலத்து இருந்தால் மேற்படி எதிரி, சுப்பிரமணியன் மிரட்டிய சம்பவம் தெரிய வந்திருக்கும் என்று சொன்னால் சரிதான் ஆனால் நான் அழைப்பு பட்டியலை வாங்கி பரிசீலிக்கவில்லை. அ.சா.1 தன்னுடைய புகாரில் உதயகுமார், தங்கராஜ் மற்றும் எதிரியுடைய செல்போன் எண்ணை குறிப்பாக சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

5. என்னுடைய விசாரணையின் போது எதிரி அ.சா.1 மற்றும் இறந்துபோன செல்போன்களை நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். அவ்வாறு கைப்பற்றாததற்கான தனிப்பட்ட காரணம் உள்ளதா என்றால் இல்லை. இறந்துபோன நபர் இருசக்கர வாகனத்தில் சென்றபோது போன் பேசிக்கொண்டு சென்றதாக என்னுடைய விசாரணையில் தெரியவரவில்லை. இறந்து போன நபரின் செல்போன் சம்பவ இடத்திலிருந்ததா, அது யாரால் எடுத்துச் செல்லப்பட்டது என்பது குறித்து என்னுடைய புலன் விசாரணையில் தெரிய வரவில்லை என்று சொன்னால் சரிதான். அரசு தரப்பில் குறிப்பிட்டவாரு எதிரிக்கும் அ.சா.1 க்கும் இடையில் செல்போன் மூலம் எந்த உரையாடலும் நிகழவில்லை என்றாலும் அழைப்பு பட்டியலை தாக்கல் செய்தால் மேற்படி சங்கதி வெளியே வந்துவிடும் என்பதால் அது அரசரப்புக்கு எதிராக இருக்கும் என்பதால் அதை வேண்டுமென்றே நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி, இறந்து போனவரின் வீட்டுக்கு சென்று கொலை முயற்சி செய்ததாக எந்தவிதமான வழக்கும் முன்னிலைப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

6. அ.சா.1 ம் இறந்து போனவரும் தான் எதிரி தங்கி இருந்த சொரியன்கிணத்துபாளையத்தைச் சேர்ந்த கணபதி என்பவர் வீட்டிற்கு எதிரியை தேடி சென்றுள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். எதிரியை இறந்து போனவரின் செல்போனில் இருந்து தொடர்பு கொண்டு பேசினார்களா அல்லது அ.சா.1 ன் செல்போனில் இருந்து தொடர்பு கொண்டு பேசினார்களா என்று அ.சா.1 தன்னுடைய புகாரிலோ அல்லது என்னுடைய விசாரணையின் போதோ தெரிவிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரி சொரியன்கிணத்துபாளையம் பகுதியில் குடியிருக்கிறார் என்று சொன்னால் சரிதான். புகார்தாரர் குடும்பத்தாருக்கு பயந்து எதிரி கச்சேரிவலசில் உள்ள டாக்டர் வீட்டிற்கு சென்று பதுங்கி இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. கச்சேரி வலசு ரேசன் கடை அருகில் உள்ள டாக்டர் அன்பு தனபதி வீட்டில் தான் எதிரி இருக்கிறார் என்பதை எப்படி அ.சா.1 ம் இறந்துபோனவரும் தெரிந்துகொண்டு

அங்கு சென்றார்கள் என்று புகாரிலோ என்னுடைய விசாரணையிலோ குறிப்பாக சொல்லியுள்ளார்களா என்றால் எதிரி தான் மேற்படி சங்கதியை சொன்னதாக புகாரில் குறிப்பிட்டுள்ளார். அ.சா.1ம், இறந்துபோனவரும் சாட்சிகள் யாரையும் விசாரித்து மேற்படி வீட்டுக்கு சென்றதாக என்னிடம் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான் அவர்கள் யாரையும் விசாரிக்கவில்லை.

7. தன்னுடைய உயிருக்கு பயந்து பதுங்கி இருக்கும் எதிரி தான் இருக்கும் இடத்தை அ.சா.1 னிடமோ அவரது சகோதரரிடமோ சொல்லி இருக்கமாட்டார் என்றாலும் வழக்குக்காக எதிரி தான் சொன்னார் என்று தவறாக குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1ம் அவரது சகோதரரும் எதிரி அவர்களை அசிங்கமாக பேசியதால் என்ன என்று கேட்பதற்காக எதிரி தேடிச் சென்றுள்ளார்கள். எதிரி அ.சா.1யும் இறந்து போனவரையும் அசிங்கமாக பேசினார்கள் என்பதாக எந்தவிதமான புகாரும் காவல் நிலையத்தில் பெறப்படவில்லை என்று சொன்னால் வெள்ளகோவில் காவல் நிலையத்தில் கொடுக்கப்படவில்லை. நான் குறிப்பிட்டது போல எதிரி அ.சா.1யை அசிங்கமாக திட்டாததால்தான் அது குறித்து புகார் எதுவும் காவல் நிலையத்தில் கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. கச்சேரி வலசுக்கும் சொரியன்கிணத்து பாளையத்திற்கும் சுமார் 3 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும். சொரியன்கிணத்துபாளையத்திற்கும் வெள்ளகோவில் பழைய பேருந்து நிலையத்திற்கும் சுமார் 3 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும். சொரியன்கிணத்துபாளையத்திற்கும் வெள்ளகோவில் புதிய பேருந்து நிறுத்தத்திற்கும் எவ்வளவு தொலைவு என்றால் அது எனக்கு நினைவில்லை.

8. தனபதி மருத்துவர் வீட்டில் ஏதேனும் பெயர் பலகை இருந்ததா என்பது குறித்து பார்வை மகஜரிலோ அல்லது வரைபடத்திலோ நான் குறிப்பாக சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான் பெயர்பலகை இல்லை. சம்பவத்திற்கு முன்பு அ.சா.1க்கோ இறந்து போனவருக்கோ மருத்துவர் தனபதியையோ அல்லது அவரது உதவியாளர் சார்லசையோ தெரியாது என்ற விபரத்தை என்னுடைய விசாரணையில் நான் தெரிந்து கொண்டேனா என்றால்

அது குறித்து தெரியவில்லை. அ.சா.1 மேற்படி மருத்துவர் தனபதி மற்றும் அவரது உதவியாளர் சார்லசை எவ்வாறு தெரிந்து கொண்டார் என்று என்னுடைய விசாரணையில் குறிப்பிட்டுள்ளாரா என்றால் அது குறித்து சொல்லவில்லை. முன் அறிமுகம் இல்லாத மருத்துவர் தனபதி மற்றும் அவரது உதவியாளர் சார்லஸ் என்பவர் பெயர்களை புகாரில் அ.சா.1 குறிப்பிட்டதாக கூறுவது சந்தேகத்தை ஏற்படுத்துவதாக உள்ளது என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 ம் இறந்து போனவரும் மருத்துவர் தனபதி வீட்டுக்கு சென்றபோது அவரது வெளிப்புற கேட் உட்புறம் பூட்டப்பட்டிருந்ததா? இல்லையா? என்பது குறித்து என்னுடைய விசாரணை தெரிய வந்ததா என்றால் இல்லை. அ.சா.1, இறந்துபோனவரும் திறந்திருந்த கேட்டின் வழியாக மேற்படி வீட்டிற்கு சென்றார்களா அல்லது மூடப்பட்டிருந்த கேட்டை திறந்து உள்ளே சென்றார்கள் என்று குறிப்பாக என்னுடைய விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

9. அ.சா.1 ம் நான்கு நபர்களும் எதிரியுடன் தகராறு செய்வதற்காக மேற்படி இடத்திற்கு சென்றபோது அங்கே ஏற்பட்ட கைகலப்பில் இறந்து போனவருக்கு காயம் ஏற்பட்டு அவர் இறந்து விட்டார் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவத்தில் எதிரிக்கும் காயம் ஏற்பட்டிருந்தது என்று சொன்னால் சரிதான். எதிரிக்கும் காயம் ஏற்பட்டிருந்தது என்று சொன்னால் சரிதான் அவருக்கு காயம் இருந்தது ஆனால் சம்பவத்தில் ஏற்பட்டதா என்று எனக்கு தெரியாது. எதிரிக்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது என்று அ.சா.1 தன்னுடைய புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னுடைய விசாரணையின் போது எதிரி தனக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்று சொல்லவில்லை. இறந்து போனவரை கொள்வதால் எதிரிக்கு எந்தவிதமான ஆதாயமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இறந்து போனவருக்கும் தனிப்பட்ட விரோதம் எதுவும் இல்லாததால் எதிரி மீது கொலை குற்றம் சுமத்தியிருப்பது ஏற்க்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

10. அ.சா.1ம் இறந்து போனவரும் மேற்படி சம்பவ இடத்திற்கு சென்ற போது எதிரி சட்டை இல்லாமல் இருந்துள்ளார் என்றால் சரிதான். அ.சா.1ம் இறந்து போனவரும் அங்கு வருவார்கள் என்ற எண்ணம் இல்லாமல் அவர் சட்டை இல்லாமல் எப்போதும் போல இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சங்கதியை நான் விசாரணையில் கருத்தில் கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. இருடா சட்டையை போட்டு வருகிறேன் என்று எதிரி உள்ளே சென்றவர் மீண்டும் சட்டையை அணிந்து திரும்ப வந்தாரா என்று அ.சா.1 தன்னுடைய புகாரிலோ அல்லது முதல் விசாரணை வாக்குமூலத்திலோ என்னிடம் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல சட்டை போடாமல் வந்ததாக சாட்சிகள் என்னிடம் குறிப்பிட்டுள்ளார்கள். உள்ளே சென்றவர் எவ்வளவு நேரம் கழித்து வெளியே வந்தார் என்று என்னிடம் சாட்சிகள் சொன்னார்களா என்றால் இல்லை உடனே வந்ததாகச் சொன்னார். பேண்டின் எந்த பாக்கெட்டில் கத்தியை வைத்து எடுத்து வந்தார் என்று சாட்சிகள் என்னிடம் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். சா.பொ.2 கத்தி பேண்ட் பாக்கெட்டில் வைக்கும் அளவுக்கானது அல்ல என்று சொன்னால் சரியல்ல. இறந்து போன நபரும் எதிரியும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான் இருவரும் கன்னட மொழி பேசுபவர்கள் என்றால் சரிதான். அவர்கள் இருவருக்கும் நடந்த உரையாடல் தமிழில் நடந்ததா அல்லது கன்னடத்தில் நடந்ததா என்று நான் குறிப்பாக விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதை குறிப்பிட்டு என்னிடம் சொல்லவில்லை.

11. இறந்து போனவரை உயிர்போகும் இடத்தில் குத்துவதற்கு எதிரி முயற்சி செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கு, இறந்துபோன நபரை கொலை செய்யும் நோக்கம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி, இறந்துபோனவரை குத்த முயற்சிக்கும்போது அதை தடுக்க முயற்சி செய்ததாக அ.சா.1 என்னுடைய விசாரணையின் போது என்னிடம் சொல்லவில்லை என்று சொன்னால் குறிப்பிட்டு சொல்லவில்லை. காயம்பட்ட நபரை அ.சா.1 தான் மேற்படி டிவிஎஸ் 50யில் தான் மீண்டும் ஏற்றி

மருத்துவமனை கூட்டிச் சென்றார் என்றால் சரிதான். இறந்து போன நபருக்கு ரத்தப்போக்கு இருந்தது என்பதை என்னுடைய விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் இரத்தப்போக்கு இருந்தது அதிகமான ரத்தப்போக்கா அல்லது குறைவான இரத்தப் போக்கா என்று எனக்கு தெரியாது. இறந்து போனவர் கூட்டி செல்லப்பட்ட டிஎஸ் 50யில் ரத்தம் பட்டு இருந்ததா என்றால் அது குறித்து நான் விசாரிக்கவில்லை. டிவிஎஸ் 50 இந்த வழக்கில் சம்பந்தப்படாத வாகனம் என்றாலும் அதனால் தான் அதை இந்த வழக்கில் நான் வழக்கு பொருளாக தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. இறந்து போனவரின் ரத்தப்போக்கை நிறுத்துவதற்கு அ.சா.1 தன்னுடைய துண்டை எடுத்து கட்டினார் என்பதாக என்னிடம் சொன்னாரா என்றால் இல்லை. அ.சா.1 அவ்வாறு தன்னுடைய துண்டை எடுத்து கட்டியுள்ளார் என்றாலும் மேற்படி துண்டை நான் கைப்பற்றவில்லை என்று சொன்னால் என்னுடைய விசாரணையில் அவர் அவ்வாறு குறிப்பிடவில்லை.

12. சம்பவ இடத்தில் சத்தம் கேட்டு அருகில் இருந்தவர்கள் கூடி விட்டார்களா என்றால் கூடி விட்டார்கள். சுமார் 25 பேர் அவ்வாறு பார்த்திருப்பார்கள். சம்பவத்தை பார்த்த சாட்சிகளை நான் விசாரித்துள்ளேன். எதிரி சம்பவ இடத்திலிருந்து ஓடும் போது சம்பவ இடத்திலிருந்த மேற்படி 25 நபர்களும் அவரை பிடிக்க முயற்சி செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். அவ்வாறு யாரும் சாட்சிகள் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றாலும் நான் வழக்குக்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எதிரியை கைது செய்வதாக கூறப்படும் நேரத்தில் அவர் காங்கேயம் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. தன்னுடைய கைவிரலில் ஏற்பட்ட காயத்திற்காக காங்கேயம் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த எதிரியை நான் என்னுடைய அதிகாரத்தை பயன்படுத்தி கூட்டி வந்து விட்டேன் என்றாலும் மீண்டும் காங்கே மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்க முடியாது என்பதால் அவரை பல்லடம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்து உள்ளேன் என்று

சொன்னால் சரியல்ல. மேற்படி சங்கதி பல்லடம் மருத்துவமனை விபத்து பதிவேட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனவே எதிரியை கைது செய்ததாக கூறுவதும் பொருட்களை கைப்பற்றுதாக கூறுவதும் தவறு என்றாலும் மேற்படி பொருட்கள் காவல் நிலையத்தில் வைத்து வழக்குக்காக தயார் செய்யப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல.

13. எதிரி இறந்துபோன நபரை கொலை செய்யும் நோக்கத்துடன் குத்தினால் எதிரி தன் கையை தானே குத்தி காயப்படுத்திக் கொள்ள அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி அழைப்பதாக இருந்தால் சிவன்மதியின் தந்தை அல்லது அவரது கணவரை அழைத்து இருக்கலாம் என்றாலும் இறந்து போன தங்கராஜை அழைத்து பேசியிருக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1ம் இறந்து போனவரும் வருவார்கள் என்று எதிரி மறைந்து இருந்து அவர்களை தாக்க முயற்சிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. காங்கேயம் அரசு மருத்துவமனை மருத்துவர் என்னுடைய விசாரணையின் போது சம்பவம் நடந்தது தோப்பு மணி வீடு என்று குறிப்பிட்டார் என்றால் இல்லை. நான் மேற்படி மருத்துவரை விசாரிக்கவே இல்லை என்றாலும் விசாரித்ததாக நானே வாக்குமூலத்தை ஏற்படுத்திக் கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்தை மாற்றி என்னிடம் சொன்னதால் அது தரப்பு வழக்கிற்கு எதிராக இருக்கும் என்பதால் அதை நான் பதிவு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

14. சம்பவத்தின் போது அ.சா.1 மருத்துவர் தனபதி மற்றும் சார்லஸ் ஆகியோர்தான் சம்பவ இடத்தில் இருந்ததாக என்னுடைய விசாரணையில் தெரியவந்தது என்றால் சரியல்ல சிரஞ்சீவி என்பவர் இருந்திருக்கிறார். மேற்படி சிரஞ்சீவி என்பவர் சம்பவ இடத்திற்கு தான் வந்தபோது எதிரி ஓடியதாக தான் குறிப்பிட்டார் என்றாலும் சம்பவத்தை நேரில் பார்த்ததாக என்னிடம் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். காயம்பட்ட நபர் சம்பவ இடத்திலிருந்து ஆம்புலன்ஸ் மூலம் அழைத்துச் செல்லப்படவில்லை என்று

சொன்னால் சரிதான். சம்பவம் சுமார் மூன்று முதல் நான்கு நிமிடங்களுக்குள் நடந்ததாக என்னுடைய விசாரணையில் தெரியவந்தது. பேசிய பிறகு சம்பவம் நடந்ததாக எனது விசாரணையில் தெரியவந்தது.

**உணவு இடைவேளைக்காக நீதிமன்றம் கலைவதால் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

**உணவு இடைவேளைக்கு பின்பு மீண்டும் சாட்சி வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

15. அ.சா.1 காயம் பட்டவரை இருசக்கர வாகனத்தில் வெள்ளகோவில் புது பேருந்து நிலையத்திற்கு கொண்டு சென்றுஅங்கிருந்து ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு கூட்டி சென்றதாக என்னிடம் குறிப்பிட்டுள்ளார் அப்போது அவர்கள் சென்ற டிவிஎஸ் 50 வாகனத்தை எங்கே விட்டு சென்றார் என்று என்னிடம் குறிப்பாக சொல்லவில்லை. காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு காயப்பட்டவரை கூட்டி சென்றதாக என்னிடம் குறிப்பாக சொல்லவில்லை. காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு சென்ற அதே ஆம்புலன்சில் தான் ஈரோடு அரசு மருத்துவமனைக்கும் இறந்துபோன நபரை கூட்டி சென்றுள்ளதாக அ.சா.1 என்னிடம் குறிப்பிட்டுள்ளார். சம்பவம் மருத்துவர் தனபதி வீட்டில் குறிப்பாக எந்த இடத்தில் நடந்ததாக அ.சா.1 தன்னுடைய புகாரிலோ அல்லது என்னுடைய விசாரணையின் போதோ தெரிவித்துள்ளாரா என்றால் இல்லை. அ.சா.1 சம்பவம் நடந்த இடம் எது என்று கூறாத சூழ்நிலையில் நான் பார்வை மகஜரிலும் மாதிரி வரைபடத்திலும் சம்பவம் இடமாக ஒரு இடத்தை குறிப்பிட்டு இருப்பது தவறு என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 மற்றும் இறந்துபோனவர் தனபதியின் வீட்டு கேட்டுக்கு அருகில் வந்து சத்தம் போட்டவுடன் தனபதி வந்து கேட்டை திறந்ததாக என்னிடம் அ.சா.1 குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை. பார்வை மகஜரில் சம்பவ இடத்தை யார் அடையாளம் காட்டினார் என்று குறிப்பாக நான் சொல்லவில்லை என்றால் சரிதான். மருத்துவர் தனபதியின் வீட்டு போர்ட்டிக்கோவில் ரத்தம் சிதறி இருந்தது என்று சொன்னால் சரிதான்.

16. சம்பவத்தின் போது மருத்துவர் தனபதியின் வீட்டில் மின்விளக்குகள் எரிந்து கொண்டிருந்ததா என்பது குறித்து அ.சா.1 என்னிடம் குறிப்பாக சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். நான் சம்பவ இடத்தை பார்வையிட்டபோது மருத்துவர் தனபதியின் வீட்டில் மின்விளக்குகள் இல்லை என்று சொன்னால் சரிதான். சம்பவ சமயத்தில் மருத்துவர் தனபதி வீட்டில் மின்விளக்கு இல்லை. வெளிச்சமில்லை என்ற சங்கதியை என்னுடைய புலன் விசாரணை நான் மறைத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கைப்பற்றிய இறந்து போன நபர் சம்பவத்தின் போது அணிந்திருந்த உடைகளில் கத்திக்குத்தியதால் ஏற்பட்ட ஓட்டை இருந்ததா என்பதை நான் கவனித்தேனா என்றால் தற்போது எனக்கு நினைவில்லை. மேற்படி இறந்து போனவர் அணிந்திருந்த சட்டையை கைப்பற்றியதாக கூறப்படும் படிவம் 9–ல் மேற்படி சட்டையில் கத்திக்குத்து ஓட்டை இருந்ததாக நான் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான் மேற்படி **படிவம் 91 எ.தா.சா.ஆ.3.**

17. அரசு தரப்பில் கூறப்பட்டவாறு சம்பவம் நடைபெறாததால் தான் இறந்துபோனவர் அணிந்திருந்த உடைகளில் கத்தி குத்து ஓட்டை காணப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. தனபதி மருத்துவர் வீட்டில் வெளிப்புற கேட் எந்த திசையை பார்த்திருந்தது என்றால் கிழக்கு திசையை பார்த்திருந்தது. மேற்படி வீட்டின் வெளிப்புற கதவு கிழக்கு பார்த்தவாறு இருந்தது. மேற்படி வீட்டில் இருந்து பார்த்தால் ரோட்டில் நடமாட்டம் தெரியும் என்று சொன்னால் சரிதான். மருத்துவர் தனபதி வீடும் அதற்கு வடபுறம் இல்ல திருமலைக்குமார் வீடும் ஒரே காம்பவுண்டில் அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி திருமலை குமாரை நான் இந்த வழக்கில் ஒரு சாட்சியாக விசாரித்து சேர்க்கவில்லை என்று சொன்னால் நான் விசாரிக்கவில்லை சாட்சி சொல்ல முன் வராததால் அவரை நான் சாட்சியாக சேர்க்கவில்லை. அவர் சாட்சியாக இருக்க முன் வரவில்லை என்று என்னுடைய வழக்குக் கோப்பில் நான் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. நான் இந்த வழக்கில் சரிவர புலன் விசாரணை செய்யாதால்தான் மேற்படி சாட்சி திருமலை குமாரை குறித்து

எந்த விபரத்தையும் வழக்கு கோப்பில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல.

18. சம்பத்தின் போது பயன்படுத்தியதாக கூறப்படும் கத்தி குறித்து அ.சா.1 தன்னுடைய புகாரிலோ அல்லது என்னுடைய விசாரணையிலோ குறிப்பாக சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரி இறந்து போன நபரை இத்தோடு சொத்து தொலை என்று குறிப்பிட்டு குத்தியதாக அ.சா.1 அவருடைய புகாரிலும் என்னுடைய விசாரணை போதும் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி இறந்துபோன நபரை குத்திய உடன் சம்பவ இடத்திலிருந்து ஓடிவிட்டார் என்றாலும் அவர் இறந்துவிட்டாரா என்று உறுதி செய்து கொண்டு அதன் பிறகு சம்பவ இடத்திலிருந்து சென்றதாக அரசு தரப்பு வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அவர் நின்று உறுதி செய்து கொண்டாரா என்பது குறித்து என்னுடைய விசாரணையில் தெரியவரவில்லை. இந்த வழக்கில் அரசு தரப்பில் கூறியவாறு இறந்துபோனவரை கொலை செய்ய வேண்டும் என்ற குற்ற எண்ணம் எதிரிக்கு இல்லை என்று சொன்னால் சரியல்ல. அருகில் இருந்த சாட்சிகளை அருகில் வந்தால் குத்தி விடுவதற்காக மிரட்டியதாக சாட்சிகள் யாரும் என்னிடம் கூறவில்லை என்றால் சரிதான். மருத்துவர் தனபதி, சார்லஸ் ஆகியோர் எதிரி, இறந்து போனவரை குத்தியதை தடுக்க முயற்சி செய்ததாக என்னுடைய விசாரணையில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். சம்பவத்திற்கு பிறகு மருத்துவ தனபதி மற்றும் சார்லஸ் ஆகியோர் சம்பவ இடத்திலிருந்து ஓடி விட்டார்களா அல்லது அங்கேயே இருந்தார்களா என்பது குறித்து அ.சா.1 என்னுடைய விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

19. அ.சா.1ன் சகோதரர் இறந்துவிட்டாரா என்பது குறித்து உறுதி செய்து கொள்ளாமலேயே நடந்த 11.05.2017 ஆம் தேதி 9 மணிக்கு எதிரி திருப்பூர் நல்லூர் காவல் நிலையத்தில் சரணடைந்து விட்டார் என்று சொன்னால் சரியல்ல. நான் தகவல் தெரிந்து எதிரியை இரவு 11 மணிக்கு நல்லூர் காவல் நிலையத்திலிருந்து அழைத்து வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான்

எதிரியை கைது செய்து காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தேன் என்றால் 12.05.2017 ஆம் தேதி 5.30 மணிக்கு அழைத்து வந்தேன். 12/5/2017 ஆம் தேதி நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்குப் பொருட்கள் பிழையானது என்பதால் படிவம் 91 திருப்பப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல நீதிமன்ற வேலை நேரத்தில் தாக்கல் செய்யக் கோரி திருப்பப்பட்டுள்ளது. வழக்கு பொருட்கள் பிழையானதாக தாக்கல் செய்யப்பட்டதால் தான் மீண்டும் 23.05.2017 ஆம் தேதி மீண்டும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எதிரியை வெள்ளகோவில் காவல் நிலையத்தில் என்னுடைய பாதுகாப்பில் வைத்துக் கொண்டுதான் அ.சா.1 யை வரவழைத்து புகாரை பெற்றேன் என்று சொன்னால் சரியல்ல. மறுநாள் காலை 6.00 மணி வரை எதிரி வெள்ளக்கோயில் காவல் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்தார் என்று சொன்னால் சரியல்ல.

20. மருத்துவ தனபதியின் வீடு மொத்தம் எத்தனை அறைகளைக் கொண்டது என்று குறிப்பிட்டுச் சொல்லியுள்ளேனா என்றால் இரண்டு அறை கொண்டது. அவ்வாறு எத்தனை அறைகள் உள்ளது என்று குறிப்பாக நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் மருத்துவர் தனபதியின் வீட்டில் இருக்கும் அறைகளை குறிப்பிட்டு மாதிரிவரிடம் தயார் செய்யாமல் தற்போது பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லாததால்தான் மேற்படி மருத்துவர் தனபதி வீட்டில் எத்தனை அறைகள் உள்ளது என்று என்னால் குறிப்பாக சொல்ல முடியவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி சட்டையை போடுவதற்காக எந்த அறைக்குள் சென்றார் என்று நான் குறிப்பாக என்னுடைய புலன் விசாரணையில் தெரிவிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். சம்பவ இடத்திற்கு கிழப்புறமாக தோப்பு மணி என்பவருடைய நூல் மில் உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு வடபுறம் மற்றும் கிழப்புறமாக மேற்படி தோப்புமணி என்பவருடைய நூல் மில்லில் வேலை செய்யும் பணியாளர்களின் குடியிருப்பு உள்ளது என்று சொன்னால் சரிதான்.

21. சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடம் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள இடம் என்று சொன்னால் சரிதான். சம்பவ இடத்தில் இறந்து போன நபரை இருசக்கர வாகனத்தில் ஏற்றுவதற்கு யாரேனும் உதவி செய்தார்களா என்பது குறித்து நான் விசாரித்தேனா என்றால் இல்லை. அ.சா.1 க்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்பதை குறித்து விசாரித்தேனா என்றால் இல்லை. சிவன்மதி, எதிரியுடன் வீட்டை விட்டு சென்றது தொடர்பாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளரை நான் விசாரிக்கவில்லை. எதிரி, கே எஸ் ஆர் கல்லூரியில் பிஇ படித்தவர் என்பதை என்னுடைய விசாரணையில் நான் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். எதிரி சம்பவ இடத்தில் இருந்து ஓடும் போது மூடி இருந்த வெளியே கேட்டை திறந்து கொண்டு ஓடியதாக அ.சா.1 என்னுடைய விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் சம்பவ இடத்தில் காயம் ஏற்பட்டு அவரது ரத்தமும் சம்பவ இடத்தில் சிதறி கிடந்தது என்பதை எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லைசம்பவத்தின் போது எதிரிக்கும் காயம் ஏற்பட்டு ரத்தம் சிதறி கிடந்தது என்றாலும் அதை வேண்டுமென்றே நான் நீதிமன்றத்தின் பார்வைக்கு கொண்டு வராமல் மறைக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தடயவியல் கடையில் துறை அலுவலரிடம் மேற்படி ரத்தத்தை சேகரிக்கும் போது எதிரியின் ரத்தமும் இருப்பதால் அதை தனியாக சேகரிக்குமாறு வேண்டுகோள் கொடுத்தேனா என்றால் இல்லை. காங்கேயத்தில் இருந்து ஈரோடு கொண்டு செல்லும் வழியிலேயே இறந்து போன நபர் இறந்து விட்டார் என்றாலும் ஆனால் அவரது இறப்பை ஈரோடு மருத்துவமனையில் 11.05.2017 ஆம் தேதி இரவு 9 மணிக்கு தான் மருத்துவர் உறுதி செய்தார் என்று சொன்னால் சரிதான்.

22. மேற்படி காலகட்டத்தில் அரசாங்கத்தால் மடிக்கணினி காவல்துறைக்கு வழங்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. வெள்ளகோவில் இருந்து மூலனூர் செல்லும் வழியில் கரட்டுப்பாளையம் என்ற இடத்தில் ஜெராக்ஸ் கடை எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி இடத்தில் ஜெராக்ஸ்

கடை எதுவும் இல்லை என்பதால் மேற்படி இடத்தில் நான் ஒப்புதல் வாக்குமூலத்தை தட்டச்சு செய்து அதை பதிவிறக்கம் செய்து எதிரியிடமும் சாட்சிகளிடமும் கையொப்பம் பெற்று இருக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் வைத்து தான் மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை தயார் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் கத்தி சொன்ன நேரத்தில் சொன்ன இடத்திலிருந்து கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 தன்னுடைய புகாரிலோ அல்லது முதல் விசாரணை வாக்குமூலத்திலோ இறந்து போன நபருக்கு முதுகில் காயம் ஏற்பட்டதாக குறிப்பாக சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். தாங்கள் தனபதி வீட்டிற்கு சென்றபோது எதிரி டிவி பார்த்துக் கொண்டிருந்ததாக அ.சா.1 என்னுடைய விசாரணையில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். சா.பொ.2 கத்தி இந்த வழக்குக்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

23. மருத்துவர் தனபதி வீட்டுக்கு செல்வராஜ் மற்றும் சிரஞ்சீவி ஆகியோர் வந்ததாக அ.சா.1 என்னுடைய விசாரணையின் போது சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். அ.சா.1 மேற்படி நபர்கள் சம்பவ இடத்திற்கு வந்ததாக சொல்லாத சூழ்நிலையில் நான் அவர்களை வேண்டுமென்றே சாட்சியாக சேர்த்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பும் போது பல்லடம் நீதித்துறை நடுவர் பொறுப்பில் இருந்ததால் அவர் பல்லடம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுப்பப்பட்டார். எதிர் ஏற்கனவே காங்கேயம் அரசு மருத்துவமனை சிகிச்சையில் இருந்ததால் அவரை மீண்டும் சிகிச்சைக்கு அனுப்ப முடியாது என்பதால் பல்லடம் அரசு மருத்துவமனையில் அவருக்கு சிகிச்சை அளித்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. எதிரி காங்கேயம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளார் என்றாலும் மேற்படி ஆவணங்களை நான் வேண்டுமென்றே பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் மறைத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

24. நான் கைப்பற்றியதாக கூறப்படும் கத்தியில் ரத்தக்கறை இருந்ததாக கைப்பற்றத்தில் மகஜரில் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவத்தில் மேற்படி கத்தி பயன்படுத்தப்பட்டிருந்தால் அதில் ரத்தக்கறை படிந்திருக்கும் என்றாலும் நான் தாக்கல் செய்துள்ள கத்தியில் ரத்தக்கறை இல்லாததால் அது சம்பவத்தின் போது பயன்படுத்தப்பட்டது அல்ல என்றாலும் பின்னால் என்னால் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரியின் ரத்த மாதிரி எடுக்கப்பட்டு அது தடயவியல் துறைக்கு அனுப்பப்பட்டதா என்றால் இல்லை. இறந்து போனவரின் ஆடையில் எதிரியின் ரத்தம் இருந்ததா என்பது குறித்து என்னுடைய புலன் விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் அவ்வாறு ரத்தம் படவில்லை. இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை 12.05.2017 ஆம் தேதி காலை 6 மணிக்கு காங்கேயம் நீதித்துறை நடுவரால் பெறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

25. நான் சாட்சிகளிடம் பெற்ற வாக்குமூலம் அனைத்தும் 15.05.2017 ஆம் தேதி தான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் எத்தனை மணிக்கு அது பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடாமல் காலியாக உள்ளது என்று சொன்னால் சரிதான். **மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிட்ட பகுதி மட்டும் எ.தா.சா.ஆ.4**. மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் பின்னிட்டு என்னுடைய வசதிக்கு ஏற்ப தயார் செய்ததால் தான் அதன் நேரம் நிரப்பப்படாமல் காலியாக விடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இறந்து போனவரின் ரத்தம் வீட்டுக்கு வெளியே ரோட்டில் சிந்தப்பட்டிருந்ததா என்றால் இல்லை. தடயபொருட்கள் எவ்வாறு கைப்பற்றப்பட்டு பாதுகாக்கப்பட்டன என்பது குறித்து தடய அறிவியல் நிபுணர் என்னிடம் வாக்குமூலம் அளிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். தடய பொருட்களை எவ்வாறு தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தார் என்பதாக குறிப்பாக சொல்லவில்லை என்றால் சீல் இடப்பட்ட கவர் என்று குறிப்பிட்டுள்ளார் எந்த முறையில் கொண்டு சென்றார் என்று குறிப்பாக சொல்லவில்லை.

26. தலைமை காவலர் சரவணன் தான் கைப்பற்றி வந்த இறந்துபோனவரின் துணிகளில் இருந்த ரத்தம் காய்ந்த நிலையில் இருந்ததா? அல்லது காயாத நிலையில் இருந்ததா என்று குறிப்பாக சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். இரத்தக்கரை படிந்திருந்தது என்று மட்டும் குறிப்பிட்டுள்ளார். காங்கயத்திலிருந்து திருப்பூர் அரசு மருத்துவமனை தான் அருகில் உள்ளது என்றாலும் ஈரோடு அரசு மருத்துவமனை தொலைவில் உள்ளது என்று சொன்னாலும் அது குறித்து எனக்கு தெரியாது. மருத்துவர் பரிந்துரைத்ததால் இறந்துபோன நபரை திருப்பூருக்கு அழைத்துச் செல்லாமல் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று இருக்கிறார்கள். இறந்துபோனவரின் ரத்தத்தை எதிரியின் உடைகளில் தெளித்து அதை தடயவியல் பரிசோதனைக்கு அனுப்பி உள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. புகாரில் முதல் பக்கத்தில் இடைச்செருகளாக அவரது என்ற வார்த்தையும் இரண்டாவது பக்கத்தில் கொலை என்ற வார்த்தையும் இடைச்செருகளாக சேர்க்கப்பட்டுள்ளது என்றாலும் எனவே மேற்படி புகார் காவல்துறையினரால் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. கைது குறிப்பாணையில் 8 வது காலத்தில் எதிரியிடமிருந்து கத்தி கைப்பற்றப்பட்டதாக குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான் **மேற்படி கைது குறிப்பாணை எ.த.சா.ஆ.5.** மேற்படி எ.த.சா.ஆ.5 ல் 9–வது காலத்தில் எதிரிக்கு ஏற்பட்ட காயம் பின்யோசனையாக கையில் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

27. எதிரி அவருடைய வீட்டில் அவருடைய பெற்றோர் மற்றும் தங்கையுடன் கூட்டுக் குடும்பமாக வசிக்கிறார் என்று சொன்னால் அது குறித்து எனக்கு நினைவில்லை. நாங்கள் அங்கு சென்ற போது அவர் அங்கு இருந்தார்களா என்று நான் குறிப்பாக சொல்ல முடியாது என்றால் சரிதான். மேற்படி குளியலறையில் சாதாரணமாக பார்த்தால் தெரியாத அளவிற்கு கத்தி மற்றும் துணியை எதிரி ஒளித்து வைத்திருந்தார். மேற்படி மேற்படி கத்தி ஒளித்து வைக்கப்பட்ட பிறகு 15 மணி நேரம் கழித்து என்னால் கைப்பற்றப்பட்டது. அவர்களது பெற்றோர் சகோதரி மற்றும் பக்கத்து வீட்டாரை சாட்சியாக

இருக்குமாறு அழைத்தும் அவர்கள் மறுத்து விட்டார்கள். அவர்கள் மறுத்த சங்கதியை என்னுடைய புலன் விசாரணையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் உள்ள விவரங்களுக்கும் வேறுபாடு உள்ளது என்பதால் அவை ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. அரசு தரப்பில் அரசரப்பில் குறிப்பிட்டவாறு சம்பவங்களும் நடைபெறவில்லை என்றாலும் அ.சா.1 கொடுத்த பொய் புகார் அடிப்படையில் எதிர் மீது தவறாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் நான் சரி வரப் புலன் விசாரணை செய்யாமல் அரசு தரப்பு தரப்புக்கு ஆதரவாக பொய்யான ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் எதிரியை முறையாக கைது செய்யப்படவில்லை என்றாலும் அவர் ஒப்புதல் வாக்குமூலம் தரவில்லை என்றாலும் நான் இந்த வழக்கில் தவறான புலன் விசாரணை மேற்கொண்டுள்ளேன் என்று சொன்னாலும் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.03.10 17:24:56 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.